**கவனிக்க.-** *16.03.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*
**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) இன் சிங்கள மற்றும் ஆங்கில பிரதிகள் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1751 - 2012 මාර්තු මස 23 වැනි සිකුරාදා - 2012.03.23
*1751 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 734 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 736 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | 739 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2012, மாச்சு மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, மாச்சு மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் - வெற்றிடம்

## கலேவெல பிரதேச சபை

மத்திய மாகாண சபையின் அரச சேவையின் கலேவெல பிரதேச சபையில் நிலவும் பின்வரும் III ஆம் வகுப்புப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக கலேவெல பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டோரிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| 1. | பதவிப்பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| | காவலாளி | 01 | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்படக் குறைந்தது 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். |

2. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூ. 11,730 - 10× 120 - 10 ×130 -10 × 145 - 12 × 160 - ரூ. 17,600 (4 ஆவது சம்பளப் படியேற்றத்துக்கு முன்னர் தகுதிகாண் தடை உண்டு) (அரச நிருவாக சுற்றறிக்கை 06/2006 (iv) பீ. எல். 1 - 2006 ஏ).

3. **பொதுவான தகைமைகள்.**- (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும் ;

(iii) பதவிக்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே மத்திய மாகாண அரச சேவையில் உள்ளோர் தொடர்பில் உச்ச வயதெல்லை பொருந்தாது);

(iv) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னருள்ள 03 வருடங்களுக்குக் குறையாத காலம் கலேவெல பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (வாக்காளர் பதிவு இடாப்பு அல்லது பிரதேச செயலாளரது கையொப்பத்துடனான உறுதிச் சான்றிதழ் அதனை உறுதி செய்தல் வேண்டும்) ;

(v) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்படாதவராக இருத்தல் வேண்டும் ;

(vi)ஏற்கனவே கலேவெல பிரதேச சபையில் பணியாற்றும் ஊழியர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

(vii) விண்ணப்பதாரிகள் வம்சாவளியாகவோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

04. **ஆட்சேர்ப்பு முறை.**- கட்டமைப்பான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

05. **சேவையில் ஈடுபடுவதற்கான நிபந்தனைகள்** :

(i) இந்தப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதிக்கப்பட்டவாறு விதவைகள் மற்றும் அநாதைகள் நிதியத்துக்கு நிதி செலுத்துதல் வேண்டும் ;

(ii) பதவி 03 வருடகால தகுதிகாண் சேவைக் காலத்தைக் கொண்டது ;

(iii) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தாபன விதிக் கோவையின் நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவும் காலத்துக்குக் காலம் விதிக்கும் ஏனைய நிபந்தனைகளுக்கும் சட்டவிதிகளுக்கும், உள்ளூராட்சி அமையங்களது கட்டளைச்சட்டங்கள் மற்றும் சட்டமூலங்களது ஏற்பாடுகளுக்கும், கலேவெல பிரதேச சபை விதிக்கும் கட்டளைகளுக்கும் இயைபாகச் செயற்படுவதற்கு இணங்குதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கவேண்டிய முறை.**- ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் பணியாற்றுவோர் தமது விண்ணப்பப்படிவங்களைத் தமது நிறுவகத்தின் தலைவரூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், அல்லது தாமதப்படுத்தும் அனைத்து அதிகாரமும் பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2012, மாச்சு 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், கலேவெல பிரதேச சபை, கலேவெல" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் மட்டுமே அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்

விண்ணப்பிக்கப்படும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ்கள் ;
3. தேசிய அடையாள அட்டையின் பிரதி ;
4. அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள் (அவற்றில் ஒன்று கிராம அலுவலரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்);
5. ஏற்கனவே இந்த நிறுவகத்தில் பணியாற்றுவதாயின், சேவைச் சான்றிதழ்.

எச். நிமல் குணவர்தன,
செயலாளர்,
கலேவெல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கலேவெல,
2012, பெப்புருவரி 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

*மத்திய மாகாண அரச சேவையின் கலேவெல பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள III ஆம் தர காவலாளி பதவிக்கான ஆட்சேர்ப்பு*

1. (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் : -----.
   (ii) முதலெழுத்துக்களுடன் பெயர் : -----.
2. நிரந்தர முகவரி : -----.
3. கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் : -----.
4. பிறந்த திகதி :-
   வருடம் : -----, மாதம் : -----, திகதி : -----.
5. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் உள்ளவாறான வயது :-
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
6. பால் (ஆண்/பெண்) : -----.
7. தேசிய அடையாள அட்டை இலக்கம் : -----.
8. கலேவெல பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவுக் காலம் :
   வருடங்கள் :----.
9. பிறப்பினாலா அல்லது பதிவினாலா நீர் இலங்கைப் பிரசை : -----.
10. கல்வித் தகைமைகள் : ----.
11. ஏனைய தகைமைகள் :-----.
12. தொழிற் தகைமைகள் :-----.
13. சேவை அனுபவம் :-----.

   (i) தற்போது பணியாற்றும் அமையம் :
   (ii) தற்சமயம் வகிக்கும் பதவி :
   (iii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :
   (iv) இதற்கு முன்னர் சேவையாற்றிய நிலையத்தில் வகித்த பதவி :----.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் உண்மையானவையெனவும் சரியானவை எனவும் உறுதியுரைகின்றேன். ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கமைய இங்கு தரப்பட்டுள்ள விடயங்களுள் ஏதேனும் பொய்யானவை என ஆட்சேர்ப்புக்கு முன்னரோ அல்லது பின்னரோ நிரூபிக்கப்பட்டால், நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

**திணைக்களத் தலைவரது சான்றிதழ்**

விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ............................................... என்பவர் தற்போது இந்த திணைக்களத்தில்/நிறுவகத்தில் .......................................... ஆகப் பணியாற்றுகின்றார். அவர் குறிப்பிட்டுள்ள தகவல்கள் சரியானவையென உறுதிப்படுத்துகின்றேன். அவர்

இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்படுவாரெனில், அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்வகையிலேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படவில்லை என உறுதிப்படுத்துவதுடன், அவரது விண்ணப்பத்தைப் பரிந்தரைத்து முன்வைக்கிறேன்/முன்வைக்கவில்லை.

-----,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

திகதி :-----.

பெயர் :-----.
பதவிப்பெயர் :-----.
திணைக்களத்தின்/நிறுவனத்தின் (பதவி முத்திரை) :-----.
திகதி :-----.

3-792

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## உடுநுவர பிரதேச சபை

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டம் (272 ஆவது அதிகாரம்)

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்களில் மாட்டிறைச்சிக்கென மாடு அறுக்குமிடம் நடத்தவும், பின்வருவோரது பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மாட்டிறைச்சி விற்பனைக்கான கடையை நடத்துவதற்கெனவும் 2012 ஆம் வருடத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும்படி அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளோர் விண்ணிப்பித்துள்ளாரென ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆவது அதிகாரம்) 7 (2) பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. உடுநுவர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் குறித்த அனுமதிப்பத்திரம் வழங்குவதை எதிர்ப்பதாயின், உரிய காரணங்களைக் குறிப்பிட்டு அதனை இந்த அறிவித்தல் வர்த்ததமானியில் வெளியிடப்பட்டு பதினான்கு (14) நாட்களில் இணைப் பிரதிகளில் எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆர். எம். பந்துல செனவிரத்ன,
தலைவர்,
உடுநுவர பிரதேச சபை.

உடுநுவர பிரதேச சபை அலுவலகம்,
கெலிஓய,
2012, சனவரி 20.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | விண்ணபதாரியின் பெயரும் முகவரியும் | இறைச்சி வியாபார நிலையம் அமைந்துள்ள இடம் | மாடு அறுக்கும் இடம் அமைந்துள்ள இடம் |
|---|---|---|---|
| **ஆட்டிறைச்சிக்கடை** | | | |
| 1 | திரு. மொஹமட் சுபைர் மொஹமட் முஸ்தாக், இல. 426, நிவ் எல்பிட்டிய, கெலிஓய | இலக்கம் 49, களுகமுவ, கெலிஓய | இல. 426, நிவ் எல்பிட்டிய, கெலிஓய |
| **மாட்டிறைச்சிக்கடை** | | | |
| 02 | திரு. முஹம்மது இஸ்மாயில் முஹம்மது நிஸாம், இல. 207/10, வட்டதெனிய, வெலம்பொட | இலக்கம் 141, வட்டதெனிய, வெலம்பொட | சியம்பளாகஹமுல வத்த, வெலம்பொட |
| 03 | திரு. சேகு மன்சூர் மொஹம்மட் அஸ்மி இல. 49சீ, தஸ்கர, முருதகஹமுல | இல. 330, ஹங்குரங்கேவத்த, லீமகஹகொட்டுவ | பள்ளியகாவஹேன வத்த, எகொட களுகமுவ |

| தொடர் இலக்கம் | விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | இறைச்சி வியாபார நிலையம் அமைந்துள்ள இடம் | மாடு அறுக்கும் இடம் அமைந்துள்ள இடம் |
|---|---|---|---|
| 04 | திரு. மன்சூர் மொஹமட் ரிஸ்மி, தஸ்கர, முருதகஹமுல | இல. 62 பீ, தஸ்கர, முருதகஹமுல | பள்ளியகாவஹேன வத்த, எகொட களுகமுவ |
| 05 | மொஹமட் பாருக் மொஹமட் சாதிக், இல. 528/2, நிவ் எல்பிட்டிய, கெலிஓய | புவக்வெட்டியாவத்த, களுகமுவ வீதி, கெலிஓய | பள்ளியகாவஹேனவத்த, எகொட களுகமுவ |
| 06 | திரு. முஹம்மது பஜுர்தீன் முஹம்மது சியான், இல. 07, தொம்பகொல்ல முருதகஹமுல | இல. 383, ஹங்குரங்கேவத்த, பூவலிகட | சியம்பளாகஹமுல வத்த, வெலம்பொட |
| 07 | திரு. முயீனுதீன் மொஹமட் இக்பால் இல. 157, பெனிதெனிய, பேராதெனிய | இல. 135, தவுலகல, ஹந்தெஸ்ஸ | சியம்பளாகஹமுல வத்த, வெலம்பொட |
| 08 | திரு. ஹேந்தெனியே சம்சுதீன் அபூபக்கர், இல. 130/ஏ, குருகுத்தல, கடுகண்ணாவ | இல. 130ஏ, குருக்குத்தல, கடுகண்ணாவ | இல. 252/1 ரெகவல்பொல வீதி, வெலம்பொட |
| 09 | திருமதி ஆயிஷா உம்மா மொஹமட் ஹனிபா, இல. 115, கண்டி வீதி, வெலம்பொட | இல. 48, கண்டி வீதி, வெலம்பொட | சியம்பளாகஹமுல வத்த, வெலம்பொட |
| 10 | திரு. மொஹம்மது சாலி நிர்ஷாட் மொஹம்மது, இல. 479/4, களுகமுவ, கெலிஓய | புவக்வெட்டியாவத்த, களுகமுவ வீதி, கெலிஓய | பள்ளியகாவஹேன வத்த, எகொட களுகமுவ |
| 11 | திரு. மொஹமட் அனீஸ் ஸாஜித் அஹமட், இல. 29/6 ரெகவல்பொல வீதி, வெலம்பொட | இல. 58பீ, கூரதெனிய வீதி, வெலம்பொட | இல. 252/1, ரெகவல்பொல வீதி, வெலம்பொட |
| 12 | திரு. முஹமட் சாலி முஹமட் சித்தீக், இல. 490/2 டி, களுகமுவ, கெலிஓய | இல. 330, தெல்லங்க, பள்ளி வீதி, கெலிஓய | பள்ளியகாவஹேன வத்த, எகொட களுகமுவ |
| 13 | திரு. அன்வர்தீன் மொஹமட் ஹஸன், இல. 133டி, தும்பள்ளங்க, ஹந்தெஸ்ஸ | 211/2, கண்டி வீதி, தவுலகல ஹந்தெஸ்ஸ | இல. 252/1, ரெக்கவல்பொல வீதி, வெலம்பொட |

3-793

---

## வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமமளித்தல் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தம்*

இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளநபர், இடத்தில் அவரின் பெயருக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள களரியை 2012 ஆம் ஆண்டில் வைத்திருப்பதற்கு மேற்படி உரிமமளித்தல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

அத்தகைய உரிமம் அக்களரிக்கு வழங்கப்படுவதற்கு ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும், சொல்லப்பட்ட களரிக்கென உத்தேசிக்கப்பட்டிருக்கும் வளவுக்கு அண்மையில் வதியும் எந்த ஆளும் தனது ஆட்சேபனைக்கான ஏதுக்கள் பற்றிய எழுத்து மூலமான

கூற்றொன்றினை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்படும் திகதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இரு பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

(திருமதி) தி. அன்னலிங்கம்,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை.

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி,
2012, பெப்புருவரி 28.

**அட்டவணை**

| விண்ணப்பதாரரின் பெயரும் முகவரியும் | களரியின் தலைவரா, செயலாளரா அல்லது முகாமையாளரா என்பது | களரியின் பெயர் | களரி அதனது செயற்பாடுகளை நடாத்த உத்தேசித்திருக்கின்ற மனைத்தலம் |
|---|---|---|---|
| ஜயாத்துரை விக்னேஸ்வரன் ஐங்கரபதி, தேவரையாளி, நெல்லியடி வடக்கு, கரவெட்டி | முகாமையாளர் | ஐங்கரன் விளையாட்டுக் கழகம் | பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. |

3-802

---

## குருவிட்ட பிரதேச சபை

குருவிட்ட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் கீழ் முன்னேற்றமடைந்த பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்துவதற்கு சபரகமுவ மாகாணத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதை பொது மக்கள் அறிந்துகொள்வதற்காக இத்தால் அறிவிக்கின்றேன்.

பிரேமரத்ன மல்கெக்குல,
தவிசாளர்,

பிரதேச சபை,
குருவிட்ட.

**அட்டவணை**

***குருவிட்ட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தின் புதிய மதிப்பீட்டு வரி எல்லைகள்***

1. கொழும்பு இரத்தினபுரி வீதியின் ஏதண்டவலையிலிருந்து ஆர். ரீ. எஸ். பெக்டரி வரையுள்ள பாதையின் மத்திய புள்ளியிலிருந்து வலது பக்கமாக 150 மீற்றர்கள் வரை
2. கொழும்பு இரத்தினபுரி வீதியின் 82/2 இலக்கப் பாலத்திலிருந்து ஏதண்டவலைச் சந்தி வரையுள்ள பாதையின் மத்திய புள்ளியிலிருந்து இருபக்கங்களுக்கும் 150 மீற்றர்கள் வரை
3. கொழும்பு இரத்தினபுரி வீதியின் பெரடைஸ் இசுரு பெதெச துணைப்பாதையில் ஆரம்பத்திலிருந்து குளம் வரையுள்ள பாதையின் மத்திய புள்ளியிலிருந்து இருபக்கங்களுக்கும் 150 மீற்றர்கள் வரை
4. கொழும்பு இரத்தினபுரி வீதியின் பெரடைஸ் சமன் பெதெச துணைப் பாதையின் ஆரம்பத்திலிருந்து அப்பாதை முடிவடையும் வரையுள்ள (திரு வை. விசும்பெரும அவர்களின் வீடு வரையுள்ள) பாதையின் மத்திய புள்ளியிலிருந்து இருபக்கங்களுக்கும் 100 மீற்றர்கள் வரை
5. குருவிட்ட குருபெல்கட பாதையின் ஆரம்பத்திலிருந்து எரத்ன பாதை சந்திக்கும் வரையுள்ள பாதையின் மத்திய புள்ளியிலிருந்து இருபக்கங்களுக்கும் 100 மீற்றர்கள் வரை
6. இரத்தினபுரி கொழும்பு வீதியின் 82/2 இலக்கமுடைய பாலத்திலிருந்து 86/5 இலக்கமுடைய பாலம் வரையுள்ள பாதையின் மத்திய புள்ளியிலிருந்து இருபக்கங்களுக்கும் 150 மீற்றர்கள் வரை (இந்த எல்லைக்குள் மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பீட்டு வரி அறவிடப்படும் சொத்துக்கள் சிலவும் உள்ளன)

7. இரத்தினபுரி கொழும்பு வீதியின் 86/5 இலக்கப் பாலத்திலிருந்து 86/2 இலக்க மதகுவரையுள்ள பாதையின் மத்திய புள்ளியிலிருந்து 150 மீற்றர்கள் வரை

8. இரத்தினபுரி கொழும்பு வீதியின் 86/2 இலக்க மதகிலிருந்து 86/1 ஆம் இலக்க மதகுவரையுள்ள பாதையின் இருபக்கங்களிலிருந்தும் 100 மீற்றர்கள் வரை (இந்த எல்லைக்குள் மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பீட்டு வரி அறவிடப்படும் சொத்துக்கள் சிலவும் உள்ளன)

9. இரத்தினபுரி கொழும்பு வீதியின் 86/1 இலக்க மதகிலிருந்து நாமல்தெனிய கமநல சேவைகள் மத்திய நிலையம் வரையுள்ள பாதையின் மத்திய புள்ளியிலிருந்து இருபக்கங்களுக்கும் 150 மீற்றர்கள் வரை

10. இரத்தினபுரி கொழும்பு வீதியின் நாமல்தெனிய கமநல சேவைகள் மத்திய நிலையத்திலிருந்து எஹெலியகொட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசம் ஆரம்பமாகும் வரையுள்ள பாதையின் மத்திய புள்ளியிலிருந்து இருபக்கங்களுக்கும் 150 மீற்றர்கள் வரை (இந்த எல்லைக்குள் மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பீட்டு வரி அறவிடப்படும் சொத்துக்கள் சிலவும் உள்ளன)

3-890

# நானாவித அறிவித்தல்கள்

**சாவகச்சேரி நகராட்சி மன்றம்**

*உரிமக் கட்டணங்கள் வரிகள் - 2012*

**நகர சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 255)**

1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாநகர சபைகள், நகரசபைகள் (திருத்த) சட்டத்தாலும் 1975 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க (திருத்த) சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான நகரசபைகள் கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயம்) 162 ஆம் பிரிவு அதிகாரத்தின் கீழ் 164, 164அ, ஆ, 165 பிரிவுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணைப்படி 2012 ஆம் ஆண்டுக்கான உரிமக் கட்டணங்கள், வரிகள் 12% பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, 10% முத்திரைத் தீர்வை, 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றுடன் சேர்த்துஅறவிடுவதற்கு சாவகச்சேரி நகராட்சிமன்ற கூட்டத் தீர்மான இல. 9(ii) இன் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளது என இத்தால் தெரிவிக்கின்றேன்.

இவ்வுரிமக்கட்டணங்கள், வரிகள் 2012 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்டிராத ஒரு வியாபார நிலையம் தொடர்பாக நகராட்சிமன்றக் கூட்டத் தீர்மானத்தின்மூலம் மேற்கொள்ளப்படும் தற்காலிக மதிப்பீடொன்றின் பிரகாரம் அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

ஒரே வரி மதிப்பு இலக்கத்தின் கீழ் கைத்தொழில்களை (வியாபாரங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட எண்ணிக்கையில்) நடாத்துகையில் அத்தகைய ஒவ்வொரு கைத்தொழில்களுக்கும் (ஒரு வியாபாரம்), உரிய நோக்கத்திற்குப்பயன்படுத்தப்படும் நிலப்பகுதியின் பிரிவுகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்தப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு அத்தகைய கட்டணங்கள் அல்லது வீதவரிகள் தீர்மானிக்கப்பட்டதுடன், அத்தகைய வீதி வரிகள் கட்டணங்கள் செலுத்துதல் வேண்டும்.

இ. தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
சாவகச்சேரி நகராட்சிமன்றம்.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
01.03.2012.

***(அ) ஆபத்தை விளைவிக்கும் தொழில்கள்***

| தொடர் இல. | வியாபாரத்தின் தன்மை | வருடாந்த வரி | | | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. 500 இற்கு மேற்படாத விடத்து | ரூ. 501 இற்கும் ரூ. 750 இற்கும் இடைப்படு மிடத்து | ரூ. 750 இற்கும் ரூ. 1,500 இற்கும் இடைப்படு மிடத்து | ரூ. 1,500 இற்கு மேற்படு மிடத்து |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 01. | ஹோட்டல் வைத்திருத்தல் | 400 | 500 | 750 | 1,000 |
| 02. | தங்குமிடம் வைத்திருத்தல் | 300 | 400 | 500 | 1,000 |

| | | வருடாந்த வரி | | | |
|---|---|---|---|---|---|
| தொடர் இல. | வியாபாரத்தின் தன்மை | ரூ. 500 இற்கு மேற்படாத விடத்து | ரூ. 501 இற்கும் ரூ. 750 இற்கும் இடைப்படு மிடத்து | ரூ. 750 இற்கும் ரூ. 1,500 இற்கும் இடைப்படு மிடத்து | ரூ. 1,500 இற்கு மேற்படு மிடத்து |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 03. | சாப்பாட்டுக்கடை வைத்திருத்தல் | 200 | 250 | 300 | 750 |
| 04. | தேநீரகம் வைத்திருத்தல் | 150 | 200 | 300 | 750 |
| 05. | தேநீரகமும் உணவகமும் வைத்திருத்தல் | 200 | 250 | 300 | 1,000 |
| 06. | குளிர்பான விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 200 | 250 | 300 | 750 |
| 07. | குளிர்பான உற்பத்தியும் விற்பனையும் | 250 | 300 | 350 | 1,000 |
| 08. | பாண் போறணை வைத்திருத்தல் | 350 | 400 | 450 | 1,000 |
| 09. | மோட்டார் வாகனம் திருத்துமிடம் | | | | |
| | (அ) கடைச்சல் வேலை ஸ்பிறே பெயின்ரிங் தகர ஒட்டு வேலை | 300 | 350 | 400 | 750 |
| | (ஆ) மின்/வாயு ஒட்டு வேலைகளுடன் வாகனம் திருத்துதல் | 350 | 400 | 450 | 1,000 |
| | (இ) கடைச்சல் வேலை மட்டும் | 250 | 300 | 350 | 750 |
| | (ஈ) மோட்டார் வாகனம் திருத்துதல் மட்டும் | 450 | 500 | 600 | 1,000 |
| 10. | மோட்டார் வாகனம் சேவிஸ் செய்தல் | 400 | 500 | 600 | 1,000 |
| 11. | டயர், ரியூப் வல்கனைஸ் செய்தல் | 250 | 300 | 350 | 750 |
| 12. | மோட்டார் மின் கம்பிகள் மீள் பொருத்தல் | 100 | 150 | 200 | 500 |
| 13. | துவிச்சக்கர வண்டி திருத்துமிடம் | 150 | 200 | 300 | 750 |
| 14. | விறகு விற்பனை நிலையம் | 100 | 150 | 200 | 500 |
| 15. | மரம் அரியும் நிலையம் வைத்திருத்தல் (இயந்திரம்) | 300 | 350 | 400 | 1,000 |
| 16. | மரம் அரியும் நிலையம் வைத்திருத்தல் (மனிதவலு) | 200 | 250 | 300 | 500 |
| 17. | அரிந்த மரங்கள் விற்பனை | 350 | 400 | 450 | 1,000 |
| 18. | தச்சுத்தொழில் | | | | |
| | (அ) மோட்டார் வாகன உடற் கோப்பு | 400 | 500 | 600 | 1,000 |
| | (ஆ) .தளபாட உற்பத்தி | 350 | 400 | 450 | 1,000 |
| | (இ) சாதாரண தச்சுத்தொழில் | 250 | 300 | 350 | 750 |
| 19. | ஆபரணத் தொழிலகம் | | | | |
| | (அ) ஒருவர் தொழில் புரிதல் | 350 | 400 | 450 | 500 |
| | (ஆ) ஒன்றுக்கு மேற்பட்டோர் | 400 | 500 | 600 | 1,000 |
| 20. | சிகை அலங்கார நிலையம் | | | | |
| | (அ) ஒருவர் தொழில் புரிதல் | 250 | 300 | 350 | 500 |
| | (ஆ) ஒன்றுக்கு மேற்பட்டோர் | 350 | 400 | 450 | 750 |
| 21. | சலவைத் தொழிலகம் | 200 | 250 | 300 | 500 |
| 22. | மின்கலங்களுக்கு வலுவூட்டல் நிலையம் | 250 | 300 | 350 | 500 |
| 23. | கொல் உலை வைத்திருத்தல் | 200 | 250 | 300 | 500 |
| 24. | மின்சாரம் வாயு ஒட்டு வேலை செய்யுமிடம் | 400 | 500 | 600 | 1,000 |
| 25. | இறைச்சி விற்பனை நிலையம் | 400 | 500 | 600 | 1,000 |
| 26. | கள் தவறணை வைத்திருத்தல் | 600 | 700 | 850 | 1,000 |
| 27. | மதுபான விற்பனை நிலையம் | 400 | 500 | 800 | 1,000 |
| 28. | பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் வகை நிரப்பு நிலையம் | 450 | 500 | 800 | 1,000 |
| 29. | விவசாய இரசாயனப் பொருட்கள் விற்பனை | 400 | 450 | 500 | 1,000 |
| 30. | துணிகளுக்கு சாயமூட்டல், அச்சு வேலை | 350 | 400 | 450 | 500 |
| 31. | அச்சகம் வைத்திருத்தல் | 350 | 400 | 450 | 1,000 |
| 32. | மிளகாய் தானியம் அரைக்கும் ஆலை | 350 | 400 | 500 | 800 |
| 33. | அரிசி ஆலையும், அரைக்கும் ஆலையும் | 400 | 500 | 600 | 1,000 |
| 34. | சீமெந்து களஞ்சியப்படுத்தி விற்பனை செய்தல் | 300 | 350 | 400 | 1,000 |
| 35. | ஓடு, சீற், செங்கல், கன்னார்தகடு, கல்வனைஸ் தகடு சேகரித்து விற்பனை செய்தல் | 300 | 350 | 400 | 1,000 |
| 36. | இயந்திரம் மூலம் கல்லுடைத்தல் | 450 | 550 | 650 | 1,000 |
| 37. | புகைப்படப்பிடிப்பு நிலையம் | 400 | 450 | 500 | 750 |

| | | வருடாந்த வரி | | | |
|---|---|---|---|---|---|
| தொடர் இல. | வியாபாரத்தின் தன்மை | ரூ. 500 இற்கு மேற்படாத விடத்து | ரூ. 501 இற்கும் ரூ. 750 இற்கும் இடைப்படு மிடத்து | ரூ. 750 இற்கும் ரூ. 1,500 இற்கும் இடைப்படு மிடத்து | ரூ. 1,500 இற்கு மேற்படு மிடத்து |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 38. | தனியார் தொலைத்தொடர்பு நிலையம் | 300 | 500 | 750 | 1,000 |
| 39. | தகர ஒட்டு வேலை செய்யும் நிலையம் | 200 | 300 | 400 | 500 |
| 40. | கோழிப்பண்ணை வைத்திருத்தல் (50 கோழிகளுக்கு மேல்) | 200 | 400 | 500 | 1,000 |
| 41. | வாகனம் மூலம் ஐஸ்கிறீம் விற்பனை | - | - | - | 1,000 |
| 42. | போக்குவரத்து சேவை நிலையம் | 250 | 500 | 750 | 800 |
| 43. | சுண்ணாம்பு ஆலை வைத்திருத்தல் | 250 | 300 | 350 | 400 |
| 44. | மருத்துவ இரசாயன கூடம் ஒன்று நடாத்துதல் | 250 | 300 | 400 | 500 |
| 45. | வாயுக்கொள்கலன் விற்பனை நிலையம் | 300 | 350 | 400 | 1,000 |
| 46. | தும்புக் கைத்தொழில் | 200 | 250 | 300 | 500 |
| 47. | கருவாடு சேகரித்து விற்பனை செய்தல் | 200 | 250 | 300 | 1,000 |
| 48. | பப்படம் தயாரித்து விற்பனை செய்தல் | 200 | 250 | 300 | 500 |
| 49. | தனியார் தபால் நிலையம் வைத்திருத்தல் | 300 | 600 | 750 | 1,000 |
| 50. | பாலுணவுகள் விற்பனை நிலையம் | 100 | 500 | 750 | 1,000 |
| 51. | பாண், பிஸ்கட், இனிப்பு வகை விற்பனை நிலையம் | 200 | 400 | 500 | 800 |
| 52. | வாயு அடைத்த பானம், பழரசம் தயாரிக்கும் நிலையம் | 200 | 300 | 400 | 1,000 |
| 53. | மின் உபகரணங்கள் திருத்தும் நிலையம் | 200 | 300 | 400 | 700 |
| 54. | மின் தூண் கொங்கிறீட் கல் தயாரிக்கும் நிலையம் | 450 | 600 | 700 | 1,000 |
| 55. | நடமாடும் சிற்றுண்டி விற்பனை நிலையம் | 200 | 300 | 400 | 500 |
| 56. | யூஸ் உற்பத்தி நிலையம் | 200 | 300 | 400 | 500 |
| 57. | விலங்கு சிகிச்சை நிலையம் | 250 | 500 | 750 | 1,000 |
| 58. | மதுபான உற்பத்தி நிலையம் | 1,000 | 2,000 | 2,500 | 3,000 |
| 59. | பிளாஸ்ரிக் ஒட்டு வேலை செய்யுமிடம் | 300 | 500 | 750 | 1,000 |
| 60. | கட்டடப் பொருள் விற்பனை | 3,000 | 4,000 | 4,000 | 5,000 |
| 61. | சீமெந்துப் பொருள் உற்பத்தி விற்பனை | 1,500 | 2,500 | 2,500 | 3,000 |
| 62. | பிளாஸ்திக் பொருள் உற்பத்தி, விற்பனை | 1,500 | 2,000 | 2,000 | 2,500 |
| 63. | எண்ணெய் ஊற்றும் ஆலை | 1,000 | 2,000 | 2,000 | 3,000 |
| 64. | அலுமினியம் பொருத்துதல் | 1,000 | 2,000 | 2,000 | 3,000 |
| 65. | இணையத்தள தொடர்பு நிலையம் | 500 | 1,000 | 1,000 | 1,500 |
| 66. | ஒலி, ஒளிபரப்பு முகவர் | 1,000 | 2,000 | 3,000 | - |
| 67. | தொலைத்தொடர்பு கோபுரம் | 10,000 | 10,000 | 10,000 | 10,000 |

**(ஆ) ஆபத்தை விளைவிக்காத தொழில்கள்**

| | | வருடாந்த வரி | | | |
|---|---|---|---|---|---|
| தொடர் இல. | வியாபாரத்தின் தன்மை | ரூ. 500 இற்கு மேற்படாத விடத்து | ரூ. 501 இற்கும் ரூ. 750 இற்கும் இடைப்படு மிடத்து | ரூ. 750 இற்கும் ரூ. 1,500 இற்கும் இடைப்படு மிடத்து | ரூ. 1,500 இற்கு மேற்படு மிடத்து |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1. | புடவைக்கடை வைத்திருத்தல் | 400 | 500 | 700 | 1,000 |
| 2. | தையல் நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | | | | |
| | (அ) ஒரு தையற்காரர் மட்டும் | 200 | 250 | 300 | 350 |
| | (ஆ) 2-3 தையற்காரர் மட்டும் | 250 | 300 | 350 | 500 |
| | (இ) மூன்றிற்கு மேற்பட்ட தையற்காரர்கள் | 300 | 350 | 400 | 1,000 |
| 3. | தையல் இயந்திர விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 400 | 500 | 600 | 1,000 |

| | | வருடாந்த வரி | | | |
|---|---|---|---|---|---|
| தொடர் இல. | வியாபாரத்தின் தன்மை | ரூ. 500 இற்கு மேற்படாத விடத்து | ரூ. 501 இற்கும் ரூ. 750 இற்கும் இடைப்படு மிடத்து | ரூ. 750 இற்கும் ரூ. 1,500 இற்கும் இடைப்படு மிடத்து | ரூ. 1,500 இற்கு மேற்படு மிடத்து |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 4. | கைத்தறி நிலையம் வைத்திருத்தல் | 300 | 350 | 400 | 500 |
| 5. | மின்தறி நிலையம் வைத்திருத்தல் | 400 | 500 | 600 | 1,000 |
| 6. | நகைக்கடை வைத்திருத்தல் | 300 | 450 | 600 | 1,000 |
| 7. | நகை உற்பத்தியும் விற்பனை நிலையமும் | 400 | 500 | 750 | 1,000 |
| 8. | மேற்கத்திய மருந்துக்கடை வைத்திருத்தல் | 300 | 350 | 400 | 1,000 |
| 9. | ஆயுர்வேத மருந்துக்கடை வைத்திருத்தல் | 150 | 200 | 250 | 500 |
| 10. | பலசரக்குக் கடை வைத்திருத்தல் | 500 | 700 | 900 | 1,000 |
| 11. | மோட்டார் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையம் | 400 | 500 | 750 | 1,000 |
| 12. | துவிச்சக்கரவண்டி உதிரிப்பாக விற்பனை நிலையம் | 150 | 200 | 250 | 1,000 |
| 13. | பாதணிகள் தோற் பொருட்கள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 400 | 500 | 700 | 1,000 |
| 14. | சீற் வகைகளுக்கு குசன் செய்யும் இடம் | 400 | 450 | 500 | 600 |
| 15. | மின் உபகரணங்கள் விற்பனை நிலையம் | 250 | 300 | 350 | 1,000 |
| 16. | ஒலிப்பதிவு நிலையம் | 150 | 200 | 250 | 800 |
| 17. | கடிகாரம் திருத்துமிடம் வைத்திருத்தல் | 150 | 200 | 250 | 500 |
| 18. | மட்பாண்டப் பொருட்கள் விற்பனை நிலையம் | 200 | 250 | 300 | 500 |
| 19. | புத்தகசாலை வைத்திருத்தல் | 200 | 250 | 300 | 1,000 |
| 20. | வெற்றிலை, பாக்கு, புகையிலை சுருட்டு விற்பனை | 100 | 150 | 200 | 500 |
| 21. | பிரேதப் பெட்டி விற்பனை நிலையம் | 150 | 500 | 800 | 1,000 |
| 22. | அலங்காரப் பொருட்கள் விற்பனை நிலையம் | 150 | 500 | 800 | 1,000 |
| 23. | தயிர் விற்பனை, பால் விற்பனை | 100 | 150 | 200 | 500 |
| 24. | கதிரைகள், மேசை, மற்றும் வைபவப் பொருட்கள் வாடகைக்கு விடுதல் | 150 | 500 | 800 | 1,000 |
| 25. | புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் விற்பனை நிலையம் | 100 | 150 | 200 | 500 |
| 26. | படங்களுக்கு பிரேமிடல் | 200 | 250 | 300 | 500 |
| 27. | இரும்புப் பொருட்கள் விற்பனை நிலையம் | 400 | 600 | 800 | 1,000 |
| 28. | வானொலி திருத்துமிடம் | 300 | 500 | 700 | 800 |
| 29. | அலுமினியம் சில்வர் பொருட்கள் விற்பனை | 400 | 600 | 800 | 700 |
| 30. | மிளகாய் சேகரிப்பு நிலையம் | 400 | 500 | 600 | 1,000 |
| 31. | அரிசி சேகரிப்பு நிலையம் | 400 | 500 | 600 | 700 |
| 32. | நல்லெண்ணெய் சேகரிப்பு நிலையம் 100 லீற். மேல் | 400 | 500 | 600 | 700 |
| 33. | தேங்காய் எண்ணெய் சேகரிப்பு நிலையம் 100 லீற். மேல் | 100 | 300 | 400 | 500 |
| 34. | கால்நடைகளுக்கான விலங்குணவு விற்பனை நிலையம் | 250 | 500 | 700 | 1,000 |
| 35. | தளபாட விற்பனை நிலையம் | 350 | 400 | 450 | 500 |
| 36. | தேயிலை சேகரிப்பும் விற்பனையும் (250 கி. இற்கு மேல்) | 250 | 300 | 350 | 400 |
| 37. | குடிசைக் கைத்தொழில் | 150 | 200 | 200 | 250 |
| 38. | ஒலிபெருக்கி வாடகைக்கு விடுதல் | 100 | 150 | 200 | 250 |
| 39. | போட்டோ பிரதி செய்யும் நிலையம் | 100 | 150 | 400 | 500 |
| 40. | சாரதி பயிற்சி நிலையம் | 400 | 450 | 500 | 1,000 |
| 41. | மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையம் | 400 | 500 | 700 | 1,000 |
| 42. | கணனி பயிற்சி நிலையம் வைத்திருத்தல் | 450 | 500 | 750 | 1,000 |
| 43. | தனியார் மேலைத்தேய வைத்திய நிலையம் | 400 | 600 | 800 | 1,000 |
| 44. | தனியார் வைத்திய தொழில்நுட்ப ஆலோசனை நிலையம் | 250 | 300 | 400 | 500 |
| 45. | பொது அரங்காட்டல் நிலையம் | 250 | 500 | 750 | 1,000 |
| 46. | மூக்குக் கண்ணாடி திருத்துதலும் விற்பனையும் | 400 | 500 | 600 | 800 |
| 47. | அழகு ஒப்பனை நிலையங்கள் | 350 | 400 | 450 | 500 |
| 48. | பல் வைத்திய நிலையம் | 400 | 500 | 600 | 700 |
| 49. | இறப்பர் முத்திரை தயாரிக்கும் நிலையம் | 150 | 200 | 250 | 500 |
| 50. | கணனி/கணனி உதிரிப்பாக விற்பனை நிலையம் | 350 | 400 | 450 | 1,000 |
| 51. | வெற்றுச் சாக்கு வெற்று போத்தல் சேகரித்து விற்றல் | 150 | 200 | 250 | 300 |
| 52. | உலோகம் மரத்தளபாடம் விற்பனை நிலையம் | 250 | 300 | 400 | 1,000 |
| 53. | படப்பிரதி வாடகைக்கு விடுதல் | 150 | 200 | 250 | 500 |

| தொடர் இல. | வியாபாரத்தின் தன்மை | வருடாந்த வரி | | | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. 500 இற்கு மேற்படாத விடத்து | ரூ. 501 இற்கும் ரூ. 750 இற்கும் இடைப்படு மிடத்து | ரூ. 750 இற்கும் ரூ. 1,500 இற்கும் இடைப்படு மிடத்து | ரூ. 1,500 இற்கு மேற்படு மிடத்து |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 54. | தீந்தை வகை விற்பனை நிலையம் | 500 | 750 | 1,000 | 1,200 |
| 55. | சினிமா தியேட்டர் | 500 | 750 | 1,000 | 1,200 |
| 56. | மோட்டார் வாகன விற்பனை நிலையம் | 1,000 | 1,500 | 2,000 | 2,500 |
| 57. | துவிச்சக்கர வண்டி விற்பனை நிலையம் | 750 | 1,000 | 1,500 | 2,000 |
| 58. | கையடக்க தொலைபேசி விற்பனை நிலையம் | 750 | 1,000 | 1,500 | 2,000 |
| 59. | கையடக்க தொலைபேசி விற்பனையும் திருத்தமும் | 750 | 1,000 | 2,000 | 2,500 |
| 60. | திருமண மண்டபம் நடாத்துதல் | 1,000 | 1,500 | 2,000 | 2,500 |
| 61. | தங்குமிடம் நடாத்துதல் | 1,000 | 1,500 | 2,000 | 2,500 |
| 62. | தானியவகை பொதி செய்யுமிடம் | 300 | 600 | 900 | 1,200 |
| 63. | உடற்பயிற்சி நிலையம் | 300 | 500 | 750 | 1,000 |
| 64. | கொங்கிறீற் தூண், கல், செய்யுமிடம் | 1,000 | 2,000 | 2,500 | 3,000 |
| 65. | பழைய இரும்பு சேகரித்து விற்பனை செய்தல் | 750 | 1,000 | 1,500 | 2,000 |
| 66. | பொதி அனுப்பும் சேவை | 750 | 1,000 | 1,500 | 2,000 |
| 67. | வீடியோ படம் பிடித்தல் | 500 | 1,000 | 1,500 | 2,000 |
| 68. | தையல் இயந்திரம் திருத்துதல் | 250 | 500 | 750 | 1,000 |
| 69. | கணனி திருத்தம் | 1,000 | 1,500 | 1,500 | 2,000 |
| 70. | வாகனம், இயந்திரம் வாடகைக்கு விடுதல் | 1,000 | 2,000 | 2,000 | 3,000 |
| 71. | கயிறுவகை விற்பனை நிலையம் | 500 | 1,000 | 1,000 | 1,500 |
| 72. | தசைப்பயிற்சி நிலையம் | 500 | 1,000 | 1,000 | 1,500 |
| 73. | பிளாஸ்திக் பொருள் மொத்த விற்பனை | 1,000 | 2,000 | 2,000 | 3,000 |
| 74. | தனியார் ஆயுர்வேத வைத்திய நிலையம் | 500 | 1,000 | 1,000 | 1,500 |

(இ) **சிறப்புத் தொழில்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | வங்கித்தொழில் | 3,000 | 4,000 | 6,000 | 7,500 |
| 2. | காப்புறுதித் தொழில் | 3,000 | 4,000 | 6,000 | 7,500 |
| 3. | தனியார் நிதிக்கம்பனி | 3,000 | 4,000 | 6,000 | 7,500 |
| 4. | அடகுக்கடை | 3,000 | 4,000 | 6,000 | 7,500 |
| 5. | நொத்தாரிசு | 300 | 500 | 700 | 1,000 |
| 6. | பட வரைஞர் நிலையம் | 500 | 750 | 1,000 | 1,500 |
| 7. | ஒப்பந்தகாரர் | 3,000 | 4,000 | 5,000 | 6,000 |
| 8. | கணக்காய்வாளர் | 500 | 750 | 1,000 | 1,500 |
| 9. | தனியார் கல்வி நிலையம் | 500 | 750 | 1,000 | 1,500 |
| 10. | கணக்காளர் | 400 | 600 | 800 | 1,000 |
| 11. | வட்டிக்கடை | 400 | 600 | 800 | 1,000 |
| 12. | தரகர் | 400 | 600 | 800 | 1,000 |
| 13. | நிலஅளவையாளர் | 500 | 750 | 1,000 | 1,500 |
| 14. | போக்குவரத்து முகவர் | 500 | 750 | 1,000 | 1,500 |
| 15. | தொழில் முகவர் | 500 | 750 | 1,000 | 1,500 |
| 16. | மின் இணைப்பாளர் | 500 | 750 | 1,000 | 1,500 |
| 17. | குழாய் பொருத்துனர் | 500 | 750 | 1,000 | 1,500 |
| 18. | கேபிள் TV சேவை வழங்குநர் | 1,000 | 1,500 | 2,000 | 3,000 |
| 19. | விளம்பர சேவை | 300 | 400 | 500 | 600 |
| 20. | தனியார் முன் பள்ளி | | | | |
| | (அ) 30 மாணவர்களுக்கு உட்பட்டவை | - | - | - | 300 |
| | (ஆ) 30 மாணவர்களுக்கு மேல் | - | - | - | 500 |
| 21. | தனியார் பாடசாலை | 1,000 | 2,000 | 2,000 | 3,000 |
| 22. | கூரியர் சேவை | 500 | 1,000 | 1,000 | 1,500 |

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

*சேவைக் கட்டண அறவீடுகள் - 2012*

*சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் 2012 சனவரி மாதம் 20 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக்கூட்டத்தின் தீர்மான இல. 9(i) மூலம் கீழே குறிப்பிடப்படும் சேவைக் கட்டணங்களை 2012 ஆம் ஆண்டின் பொருட்டு விதித்து அறவிடுவதற்கு சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது என இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.*

இ. தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
சாவகச்சேரி நகராட்சி மன்றம்.

நகராட்சி மன்ற அலுவலகம்
சாவகச்சேரி,
2012.03.01.

**01. கட்டட விண்ணப்பப் பகுதி :-**

| | ரூ. ச. | |
|---|---|---|
| 1. கட்டட விண்ணப்பப் படிவ கட்டணம் | 300 0 | (வரி நீங்கலாக) |
| 2. கட்டட அமைவு சான்றிதழ் கட்டணம் | 500 0 | (வரி நீங்கலாக) |
| 3. அமைவுச் சான்றிதழ் பரிசோதனைக் கட்டணம்<br>(கட்டட விஸ்தீரணத்திற்கேற்ப நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்ணயிக்கப்பட்ட தொகை) | | (வரி நீங்கலாக) |
| 4. கட்டட விண்ணப்பப்படிவ பரிசோதனைக் கட்டணம்<br>(கட்டட விஸ்தீரணத்திற்கேற்ப நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்ணயிக்கப்பட்ட தொகை) | | (வரி நீங்கலாக) |
| 5. கட்டட அனுமதிக்கான காலநீடிப்புக் கட்டணம் ) (ஆண்டு ஒன்றுக்கு) | 200 | (வரி நீங்கலாக) |
| 6. படவரைஞர் பதிவுக் கட்டணம் | 2,500 | (வரி நீங்கலாக) |
| 7. படவரைஞர் புதுப்பித்தல் கட்டணம் | 2,500 | (வரி நீங்கலாக) |
| 8. கட்டட வரைபடத்திருத்தக் கட்டணம் | 100 0 | (வரி நீங்கலாக) |
| 9. உபபிரிவிடுகை படிவக் கட்டணம் | 500 0 | (வரி நீங்கலாக) |
| 10. உபபிரிவிடுகை பரிசோதனைக் கட்டணம் (துண்டு ஒன்றுக்கு) | 50 0 | (வரி நீங்கலாக) |

**02. வாகன, மிருக வரி :-**

| | | |
|---|---|---|
| 1. துவிச்சக்கர வண்டி உரிமக் கட்டணம் | 20 0 | (வரி அடங்கலாக) |
| 2. வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணம் | 10 0 | (வரி அடங்கலாக) |

**03. நூலக மிருக கட்டணம் அறவீடுகள் :-**

| | | |
|---|---|---|
| 1. அங்கத்துவ விண்ணப்பப்படிவக் கட்டணம் | 10 0 | (வரி நீங்கலாக) |
| 2. புதிய அங்கத்துவ கட்டணம் | 100 0 | |
| 3. அங்கத்துவம் புதுப்பித்தல் கட்டணம் | 50 0 | |
| 4. புதிய அங்கத்துவ (சிறுவர்) கட்டணம் | 50 0 | |
| 5. அங்கத்துவம் (சிறுவர்) புதுப்பித்தல் | 25 0 | |
| 6. குறித்த கால எல்லைக்குள் ஒப்படைக்கப்படாத ஒரு புத்தகத்துக்கான குற்றப்பணம்<br>(நாளொன்றுக்கு) | 1 0 | |
| 7. அங்கத்தவர்களால் தொலைக்கப்படும் புத்தகம் ஒன்றிற்கான அறவீடு -<br>புத்தகத்தின் பெறுமதியின் இரு மடங்கும்<br>புத்தகம் கட்டும் கூலி - 50 0 உம் | | |
| 8. அலுவலக உத்தியோகத்தர்களால் தொலைக்கப்படும் புத்தகம் ஒன்றிற்கான அறவீடு -<br>புத்தகத்தின் பெறுமதி + 25% | | |

**04. ஆதன வரிப் பகுதி அறவீடுகள் :-**

| | | |
|---|---|---|
| 1. ஆதனப் பெயர் மாற்ற படிவக் கட்டணம் | 150 0 | (வரி நீங்கலாக) |
| 2. ஆதனப் பெயர் மாற்ற பரிசோதனைக் கட்டணம் | 300 0 | (வரி நீங்கலாக) |
| 3. வீதி எல்லைச் சான்றிதழ் கட்டணம் | 100 0 | (வரி நீங்கலாக) |
| 4. சுவீகரிக்கப்படாமைக்கான சான்றிதழ் | 100 0 | (வரி நீங்கலாக) |
| 5. உரிமைச்சான்றிதழ் | 100 0 | (வரி நீங்கலாக) |

| | | |
|---|---|---|
| | ரூ. ச. | |
| **05. கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் :-** | | |
| 1. பிடி காசு - ஆடு (ஒன்றுக்கு) | 100 0 | |
| 2. தண்டப்பணம் - ஆடு (ஒன்றுக்கு) | 200 0 | |
| 3. பராமரிப்புச் செலவு - ஆடு (ஒன்றுக்கு - நாளொன்றுக்கு) | 50 0 | |
| 4. பிடி காசு - மாடு (ஒன்றுக்கு) | 200 0 | |
| 5. தண்டப்பணம் - மாடு (ஒன்றுக்கு) | 500 0 | |
| 6. பராமரிப்புச் செலவு - மாடு (ஒன்றுக்கு - நாளொன்றுக்கு) | 100 0 | |
| **06. கொல்கலன் கட்டணம் :-** | | |
| 1. ஆடு (ஒன்றுக்கு) | 50 0 | |
| 2. மாடு (ஒன்றுக்கு) | 100 0 | |
| **07. மாநாட்டு மண்டப வாடகை :-** | | |
| 1. மண்டப பாவனைக் கட்டணம் (நாளொன்றுக்கு) | 500 0 | (வரி நீங்கலாக) |
| 2. கதிரை பாவனைக் கட்டணம் (ஒரு கதிரை - நாளொன்றுக்கு) | 10 0 | (வரி நீங்கலாக) |
| **08. விளையாட்டு மைதான அறவீடு :-** | | |
| 1. விளையாட்டு நிகழ்வு - முதல் நாள் | 25 0 | (வரி நீங்கலாக) |
| 2. அடுத்து வரும் நாளொன்றுக்கு | 100 0 | (வரி நீங்கலாக) |
| 3. களியாட்டம் மற்றும் ஏனைய நிகழ்வுகள் (நாளொன்றுக்கு) | 1,000 0 | (வரி நீங்கலாக) |
| **09. நீர் விநியோகம் :-** | | |
| 1. குழாய் நீர் விநியோகம் (மாதமொன்றிற்கு) | 60 0 | |
| 2. புதிதாக நீர் விநியோகம் பெற்றுக்கொள்வதற்கான அனுமதிப்பத்திரம் | 100 0 | |
| 3. வெற்று நீர்த்தாங்கி வழங்கல் (நாளொன்றுக்கு) | 1,000 0 | |
| 4. நீருடன் நீர்த்தாங்கி வழங்கல் (ஒரு தடவை நாளொன்றிற்கு) | 1,500 0 | |
| 5. நீருடன் நீர்த்தாங்கி சொண்டு சென்று வழங்கல் (தனியார்) (ஒரு தடவை நாளொன்றிற்கு) | 2,500 0 | |
| 6. நீருடன் நீர்த்தாங்கி சொண்டு சென்று வழங்கல் (தனியார் தவிர்ந்த ஏனையவை) (ஒரு தடவை நாளொன்றிற்கு) | 1,500 0 | |
| 7. நகராட்சி மன்ற எல்லைக்கப்பால் எனின் மேலதிக ஒரு கிலோமீற்றருக்கு | 100 0 | |
| **10. கழிவகற்றல் :-** | | |
| 1. உழவு இயந்திரம் மூலமான திண்மக் கழிவகற்றல் (ஒரு தடவை) | 300 0 | |
| 2. கோழி இறைச்சிக்கடை கழிவுகள்அகற்றுவுதற்கான கட்டணம் (மாதாந்தம்) | 5,000 0 | |
| 3. உணவகங்களின் கழிவகற்றல் கட்டணம் (ஒரு தடவை) | 2,000 0 | (வரி நீங்கலாக) |
| 4. மலசலகூடக் கழிவகற்றல் (ஒரு தடவை) | 4,000 0 | (வரி நீங்கலாக) |
| 5. நகராட்சி மன்ற எல்லைக்கப்பால் எனின் மேலதிக ஒரு கிலோமீற்றருக்கு | 100 0 | (வரி நீங்கலாக) |
| **11. கடை வாடகை அறவீடு : -** | | |
| 1. விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்படும் தொகை வாடகையாக அறவிடப்படும் | | (வரி நீங்கலாக) |
| **12. வியாபார உரிமக் கட்டணம் :-** | | |
| 1. வியாபார நிலையங்களின் வருமானம், ஆதனப் பெறுமதி ஆகியவற்றிற்கேற்ப வியாபார உரிமக் கட்டணம் அறவிடப்படும் | | (வரி நீங்கலாக) |
| 2. மருத்துவச்சான்று விண்ணப்பம் | 100 0 | (வரி நீங்கலாக) |

| | ரூ. ச. | |
|---|---|---|
| **13. சுற்றுச் சூழல் உரிமம் :-** | | |
| 1. புதிய விண்ணப்பக் கட்டணம் | 100 0 | (வரி நீங்கலாக) |
| 2. விண்ணப்பம் புதுப்பித்தல் கட்டணம் | 50 0 | (வரி நீங்கலாக) |
| 3. பரிசோதனைக் கட்டணம் (நிலைய மூலதனத்திற்கேற்ப வேறுபடும்) | | (வரி நீங்கலாக) |
| 4. உரிமக் கட்டணம் (மூன்று வருடங்களுக்கொரு முறை) | 3,000 0 | (வரி நீங்கலாக) |
| **14. விளம்பரங்களுக்கான அறவீடுகள் :-** | | |
| **1. தனியார் ஆதனம் :** | | |
| 1. விளம்பரப் பலகைக்கான கட்டணம் 1 சதுர அடி | 50 0 | (வரி நீங்கலாக) |
| **2. நகராட்சிமன்ற ஆதனம் (நிலம்) :** | | |
| 1. விளம்பரப் பலகைக்கான கட்டணம் 1 சதுர அடி | 50 0 | (வரி நீங்கலாக) |
| 2. நிலத்திற்கான வாடகை - 1 சதுர அடி | 100 0 | (வரி நீங்கலாக) |
| **3. நகராட்சிமன்ற ஆதனம் (கட்டடம்):** | | |
| 1. விளம்பரப் பலகைக்கான கட்டணம் 1சதுர அடி | 100 0 | (வரி நீங்கலாக) |
| **4. விளம்பரப் பதாதை :** | | |
| 1. விளம்பரப் பதாகைக்கான கட்டணம் 1சதுர அடி ( ஒரு வாரம்) | 15 0 | (வரி நீங்கலாக) |
| 2. விளம்பரப் பதாகைக்கான கட்டணம் 1சதுர அடி (மூன்று மாதம்) | 50 0 | (வரி நீங்கலாக) |
| 5. வாகனம் மூலமான விளம்பரம் (நிலையானது - நாளொன்றுக்கு) | 500 0 | (வரி நீங்கலாக) |
| 6. வாகனம் மூலமான விளம்பரம் (நடமாடும் - நாளொன்றுக்கு) | 500 0 | (வரி நீங்கலாக) |
| 7. ஒளியூட்டப்பட்ட விளம்பரப்பலகைகள் (விளம்பரப் பலகைக்கான கட்டணம் - 1 சதுர அடி | 200 0 | (வரி நீங்கலாக) |
| 8. பிரசுர விளம்பரம் (ஒரு பிரசுரம்) | 15 0 | (வரி நீங்கலாக) |
| **15. பொதுச் சந்தை அறவீடுகள் :-** | | |
| 1. நிலவாடகை :- | | |
| 1. மரக்கறிச் சந்தை - 5' × 5' (நாளொன்றிற்கு) | 25 0 | (வரி அடங்கலாக) |
| 2. வெற்றிலைக்கடை 5' × 5' (நாளொன்றிற்கு) | 25 0 | (வரி அடங்கலாக) |
| 3. புடவைக் கடை 5' × 5' (நாளொன்றிற்கு) | 25 0 | (வரி அடங்கலாக) |
| 4. பழக்கடை 5' × 5' (நாளொன்றிற்கு) | 20 0 | (வரி அடங்கலாக) |
| 5. வெங்காயக் கடை 5' × 5' (நாளொன்றிற்கு) | 20 0 | (வரி அடங்கலாக) |
| 6. தேங்காய்க் கடை 5' × 5' (நாளொன்றிற்கு) | 20 0 | (வரி அடங்கலாக) |
| 7. உற்பத்திப் பொருளுக்கான வரி - விற்பனை விலையின் 4% | | |
| 2. மீன் சந்தை: | 30.0 | (வரி அடங்கலாக) |
| i. நிலவாடகை - 5' × 5' - ஒரு ஆளுக்கு (நாளொன்றிற்கு) | 30.0 | (வரி அடங்கலாக) |
| ii. மீன் வெட்டித் துப்பரவு செய்தல் - நிலவாடகை (ஒரு ஆளுக்கு நாளொன்றிற்கு) | | |
| iii. மீனுக்கான வரி - மீன் விற்பனை விலையின் 4% | | |
| 3. வாகனத் தரிப்பிடம்:- | | |
| i. துவிச்சக்கர வண்டி தரிப்பிடக் கட்டணம் | 5.0 | (வரி அடங்கலாக) |
| ii. மோட்டார் சைக்கிள் தரிப்பிடக் கட்டணம் | 10.0 | (வரி அடங்கலாக) |
| iii. ஆட்டோ, சிறிய வாகன தரிப்பிடக் கட்டணம் | 20.0 | (வரி அடங்கலாக) |
| iv. லொறி, பெரிய வாகன தரிப்பிடக் கட்டணம் | 30.0 | (வரி அடங்கலாக) |
| v. வாகனம் உட்புகுதல் கட்டணம் - ஒரு தடவை (1500கி. கி. உட்பட்டது) | 50.0 | (வரி அடங்கலாக) |

ரூ. ச.

*16. **பொதுமலசலக் கூடம் :-***

*1. பாவனைக் கட்டணம் - ஒரு தடவை* 5.0 (வரி அடங்கலாக)

*17. **களியாட்ட வரி :***

i. *நிரந்தர திரைப்படக்கூடங்கள் மூலம் விற்கப்படுகின்ற நுழைவுச் சீட்டுக்களின் முழுப்பெறுமதியின் 10%*
ii. *கலாச்சார மண்டபம் மற்றும் ஏனைய இடங்களில் கட்டண அறவீட்டுடனான நிகழ்வுகள் நடாத்தப்படுவதாயின் சபையின் முன் அனுமதி பெறப்பட வேண்டியதுடன் விற்பனை செய்யப்படும் கட்டணச் சீட்டுப் பெறுமதியின் 10% வரியாகச் செலுத்தப்படல் வேண்டும்.*

*(மேடை நாடகம், நடனம், பொம்மலாட்டம், அபிநய ஆட்டம் மற்றும் மேடை மீது நடைபெறும் அதையொத்த தன்மையைக் கொண்ட ஏதேனும் நடனம் இதனுள்ளடங்காது)*

*3-791*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.